வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 18 of 2019

வழக்கு சாட்சி - PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.அலெக்சான்டர் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ஆண்டனி | வயது | : | |
| கிராமம் | : | பந்தலூர் | | | |
| தாலுக்கா | : | நீலகிரி | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 27.01.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பெயின்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 30.11.2017 ஆம் தேதி காலை அத்தை மகன் ஜான் பால் போன் செய்து 29.11.2017 ஆம் தேதி இரவு செட்டிபாளையம் ரோட்டில் அண்ணை வேளாங்கணி சர்ச்சிற்கு செல்ல வேண்டி ரோட்டின் தென்புறத்தில் நின்றுகொண்டிருந்ததாகவும், அப்போது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும் அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாகவும்,. மருத்துவர் அவரை பரிசோதித்து இறந்துவிட்டதாக சொன்னார். நான் 30 ஆம் தேதி பல்லடம் அரசு மருத்துவமனை சென்று பார்த்துவிட்டு நான் பல்லடம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆகும். என் அப்பா பிரேதத்தின் மீது போலீசார பிரேத விசாரணை செய்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே போலீசார் எழுதிவைத்த புகாரில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். கையொப்பம் போட்டதற்கு பின்னிட்டு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.01.27 21:03:49 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 18 of 2019

வழக்கு சாட்சி - PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஜான் பால் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சாமிதாஸ் | வயது | : | |
| கிராமம் | : | பல்லடம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 27.01.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கன்சல்டன்சி சர்வீஸ் செய்து வருகிறேன். கடந்த 29.11.2017 ஆம் தேதி பல்லடம் செட்டிபாளையம் ரோட்டில் உள்ள அண்ணை வேளாங்கணி சர்சிற்கு நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக நானும் எனது பெரிய மாமா ஆம்ரோஸ் மற்றும் எனது சின்ன மாமா ஆண்டனி ஆகியோர் நின்றுக்கொண்டிருந்தபோது எனது சின்ன மாமா ஆண்டனி ரோட்டை கடப்பதற்காக இடது புறம் இருந்து வலது புறமாக தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றபோது ஒரு அரசு பேருந்து வந்து அவர் மீது மோதிவிட்டது. அதில் அவர் கீழே விழுந்துவிட்டார் எனது சின்னமாமாவுக்கு தோள்பட்டை , கால் மற்றும் இடுப்பு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. அவரை பொன்னி மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம் . மருத்துவர் அவரை பரிசோதித்து இறந்துவிட்டதாக சொன்னார். உடனே நான் என் அத்தை மகன் அலெக்சாண்டருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். விபத்தை ஏற்படுத்திய அரசு

பேருந்து எண் 3 0 ஆகும். விபத்து ஏற்பட்டவுடன் பேருந்து ஓட்டுநர் இறங்கி வந்து பார்த்தார். ஆஜர் எதிரி தான் பேருந்து ஓட்டுநர் ஆவார். மறுநாள் போலீசார் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) நாங்கள் எத்தனை மணிக்கு வேளாங்கணி சர்ச்சிற்கு நானும் என் சின்ன மாமா மற்றும் பெரிய மாமா சென்றோம் என்றால் மாலை 6.00 மணிக்கு சென்றோம். எங்கிருந்து புறப்பட்டு சென்றோம் என்றால் நான் சூலூரில் இருந்து வந்தேன். எனது மாமா சர்ச்சிலே இருந்தார். யாருடைய நிகழ்ச்சிக்காக சென்றோம் என்றால் குள்ளம்பாளையத்தில் உள்ள எனது பெரியம்மாவின் சொந்தக்காரரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு. நாங்கள் மூன்று பேரும் சாப்பிட்டுவிட்டுதான் வந்தோம் என்றால் சரிதான். நானும் எனது பெரிய மாமாவும் சர்ச்சிற்கு வெளியே நின்றுக்கொண்டிருந்தோம் சின்ன மாமா கிளம்பிவிட்டார். அப்போது இரவு நேரம் என்றால் சரிதான். அந்த இடத்தில் தெரு விளக்கு இல்லை என்றால் சரிதான்.

2) சர்ச்சிற்கு எவ்வளவு தூரம் மேற்கு பக்கமாக விபத்து ஏற்பட்டது என்றால் சுமார் 50 மீட்டர் இருக்கும். போலீசார் என்னை விசாரிக்கும்போது நானும் எனது பெரிய மாமா ஆம்ரோஸ் ஆகியோர் நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு வந்ததாகதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது சின்ன மாமா சர்ச்சிற்கு வருவதற்காக நாங்கள் காத்திருக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையின் போது பேருந்தின் எந்த பக்கம் மோதியது என்று சொல்லவில்லை என்றால் பேருந்தின் தென் பக்கம் மோதியதாக கூறினேன். மேற்படி விவரத்தை தற்போதுதான் சொல்கிறேன் என்றால் சரிதான்.நான் சொன்ன விதத்தில் சர்ச்சிற்கு போகவில்லை என்றாலும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவில்லை என்றாலும் சம்பவத்தின் போது நான் உடனிருக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. நான் பின்னிட்டு தகவல் கேட்டு சம்பவ இடம் சென்று சம்பவம்

பற்றி விசாரித்து தெரிந்துக்கொண்டு விபத்தில் அடிபட்டவர் நெருங்கிய உறவினர் என்பதால் விபத்தை கண்ணுற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்மந்திமில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.01.27 21:03:59 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 18 of 2019

வழக்கு சாட்சி - PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பாபு ரஞ்சித் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ஜார்ஜ் ராஜேந்திரன் | வயது | : | |
| கிராமம் | : | அருள் ஜோதி நகர் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 27.01.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு ஆட்டோ ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். சம்பவ காலத்தில் நான் KOB ல் வேலை செய்து வந்தேன். கடந்த 30.11.2017 ஆம் தேதி காலை செட்டிபாளையம் ரோட்டில் அண்ணை வேளாங்கனி சர்ச் அருகில் நானும் என் நண்பர் கருப்புசாமியும் நின்றுக்கொண்டிருந்தோம் அப்போது போலீசார் அதற்கு முந்தன நாள் நடந்த விபத்து சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நானும் என்னுடன் கருப்புசாமியும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போதுஎன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ. 2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) அ.சா.2 ஐ எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 10 வருடங்களாக தெரியும். நான் கையொப்பம் போட்ட தாளில்என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியும் என்றால் தெரியும். நான் எந்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால்

சர்ச்சிற்கு மேற்புறம் வைத்து கையொப்பம் செய்தேன். சர்ச்க்கு சம்பவ இடம் எவ்வளவு துாரம் என்றால் சுமார் 100 மீட்டர் மேற்கு. நான் கையொப்பம் போட்ட தாளை யார் எழுதினார் என்றால் உதவி ஆய்வாளர் தான் எழுதினார் அவர் பெயர் ஞாபகமில்லை. நான் கையொப்பத்தை எனது பேனாவில் போட்டேனா என்றால் ஞாபகமில்லை. இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் செல்லவில்லை. எனது முன்னிலையில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்யவில்லை என்றும் அ.சா.2 எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்காக பின்னிட்டு காவல் நிலையம் சென்று கையொப்பம் செய்துவிட்டு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.01.27 21:04:07 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.